# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1696/14 - 2011 මාර්තු 09 වැනි බදාදා - 2011.03.09

*1696/14 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 6/69.*

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டம்**

*1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 14 ஆம் பிரிவினதும் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுடனும் மற்றும் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*சனாதிபதி செயலகம்,*
*கொழும்பு 1,*
*2011, மாச்சு 07.*

**ஒழுங்குவிதிகள்**

*1977, நவெம்பர் 15 ஆந் திகதிய 291/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 1998, ஏப்பிறல் 8 ஆந் திகதிய 1022/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின்படி கடைசியாக திருத்தப்பட்டதுமான 2010, நவெம்பர் 22 ஆந் திகதிய 1681/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் மூலம் கடைசியாக திருத்தப்பட்டதுமான விசேட இறக்குமதிகள் அனுமதிப்பத்திர ஒழுங்குவிதிகள் கீழ் வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-*

*1. அவ்வொழுங்கு விதியின் 2 ஆம் ஒழுங்குவிதியில் :-*

*(அ) அதன் (i) ஆம் பந்தியின் (உ) என்னும் உப்பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய உப்பந்தியினை உட்புகுத்துவதன் மூலமும் :-*

*"(ஊ) திறந்த கணக்கு (O/A)" ;*

*(ஆ) அதன் (viii) ஆம் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தியினை முன்மாதிரியாக :-*

*"(viii) மேற்சொல்லப்பட்ட (ii) ஆம் பந்தி தொடக்கம் (vii) ஆம் பந்திவரையான ஏற்பாடுகள் மேற்சொல்லப்பட்ட (i) ஆம் பந்தியின் (ஈ), (உ) மற்றும் (ஊ) என்னும் உப்பந்திகளின் கீழ் செய்யப்பட்ட கொடுப்பனவுகளின் விடயத்தில் ஏற்புடையதாதல் ஆகாது.",*

(இ) அதன் (xvi) ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன்மூலமும் :-

"(xvi) இறக்குமதியாளரினால் புரியப்படும் 2 ஆம் ஒழுங்குவிதியின் (i) தொடக்கம் (xiv) வரையானதும் மற்றும் (xvii) ஆம் பந்திகளின் ஏதேனும் மீறுகையானது, அவ்வாறு தேவைப்படுத்துகின்றவிடத்து, இறக்குமதிகள் கட்டுப்பாட்டாளருடன் கூட்டாகச் சேர்த்து சுங்கப்பணிப்பாளர் தலைமையதிபதியினால் கையாளப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) அதன் (xvi) ஆம் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(xvii) (அ) எந்த இறக்குமதிகளுக்காக கொடுப்பனவானது 2 ஆம் ஒழுங்குவிதியின் (i) ஆம் பந்தியின் (ஊ) என்னும் உட்பந்தியின் நியதிகளின்படி செய்யப்படவுள்ளதோ அந்த இறக்குமதிகளின்விடயத்தில் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி இயைபான ஆயந்தீர்க்கும் ஆவணங்களின் சமர்ப்பிப்பின் மீதும் கீழே தரப்பட்ட படிவத்திலான வர்த்தகப் பொருட்பட்டியல் மீதான வெளிப்படுத்துகை ஒன்றின் மீதும் இயைபான பண்டங்களை விடுவிக்கலாம் :-

"இப்பொருட்பட்டியலினால் மேவப்பட்ட இறக்குமதிக்கான கொடுப்பனவு திறந்த கணக்கு நியதிகளின் மீது எம்மால் செய்யப்படவேண்டியிருக்கின்றதென நான்/நாம் அத்தாட்சிப்படுத்துகின்றேன்/(றோம்). நான்/நாம் இன்றிலிருந்து நூற்றியென்பது நூற்றியெண்பது (180) நாட்களினுள்.............. வங்கி ஊடாக இவ் இறக்குமதிக்கான அனுப்பு தொகையைப் பயனுறுத்துகின்றேன்/(றோம்) .

| | |
|---|---|
| ............................... | ................................................................ |
| திகதி | இறக்குமதியாளரின் கையொப்பம். |

(ஆ) சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியானவர் சுங்க வெளிப்படுத்துகையின் மீதும் பண்டங்களை ஆயந்தீர்க்கும் நேரத்தில் திறந்த கணக்கு நியதிகளின் மீதும் விடுவிக்கப்படுகின்றதென வர்த்தகப் பொருட்பட்டியல் மீது புறக்குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன், எந்த வங்கியினூடாக அனுப்பு தொகையானது பண்டங்களை ஆயந்தீர்த்த பின்னர் உடனடியாக செலுத்தப்படவேண்டியுள்ளதோ அந்த வங்கிக்கு சுங்க வெளிப்படுத்துகையில் குறித்துரைக்கப்பட்ட இயைபான இறக்குமதி பற்றிய விவரங்களை அனுப்புதல் வேண்டும் ;

(இ) அத்தகைய அனுப்பு தொகையைப் பயனுறுத்துகின்ற வங்கியானது, சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அனுப்பப்படும் இறக்குமதியாளரின் விவரங்களுடன் இறக்குமதியாளரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும். வங்கியானது அனுப்பு தொகை பற்றிய விவரங்களைப் பதிவு செய்தல் வேண்டுமென்பதுடன், அனுப்பு தொகையானது செலுத்தப்பட்டுள்ளதென்னும் பயனுள்ள புறக்குறிப்பொன்றை மூல சுங்க வெளிப்படுத்துகையின் மீதும் மற்றும் வர்த்தகப் பொருட்பட்டியல் மீதும் செய்யலாமென்பதுடன், அத்தகைய அனுப்பு தொகையை செலுத்திய பின்னர் உடனடியாக இயைபான விவரங்கள் பற்றிய சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தலும் வேண்டும்.

2. அத்தகைய ஒழுங்குவிதியின் III ஆம் அட்டவணைக்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணையை இடுவதன்மூலமும் :-

"அட்டவணை III

**இவ் உரிமத்தின் கீழ் இறக்குமதி செய்யத் தகுதியுடைய ஆட்கள் அல்லது ஆட்களின் வகுப்புகள்**

(அ) தனியாள் ஒருவர் அல்லது சொந்தப் பெயரில் அல்லது இலங்கைப் பிரசையொருவராக இருக்கின்றவரின் தொழிற் பெயரின் கீழ் வியாபாரம் செய்கின்ற தனியாள் ஒருவர் ;

(ஆ) இலங்கையில் பதிவு செய்யப்பட்ட குழுமம் ஒன்று, பங்குடமை, வேறு நிறுவனம் ;

(இ) கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டிருக்கின்ற பொதுக் கம்பனிகள் மற்றும் தனியார் கம்பனிகள் ;

(ஈ) இலங்கையில் வதிவதற்கு வலிதான விசாவைக் கொண்டுள்ள தேசத்தவராக அல்லாதவர்கள்.".

03-769

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.